DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : MC 2/2024

Petitioner Witness : PW1 cross

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அஸ்மத் பாத்திமா | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சையது கலீல் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 30/01/2026

**எதிர் மனுதாரர் ஆஜர்**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1) எதிர்மனுதாரர் உடன் நடந்த திருமணத்திற்கு முன்பு அப்துல்லா என்பவருடன் எனக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். எனக்கும், அப்துல்லாவுக்கும் இடையே நடந்த குடும்ப வாழ்க்கையில் அசிஸ் அகமது என்ற ஆண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். நான் எனது முதல் கணவருடன் ஜீவனாம்சம் ஏதேனும் வாங்கி உள்ளேனா என்றால் இல்லை. வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. அப்துல்லாவுடன் நீதிமன்றத்தில் விவாகரத்து வாங்கினேனா என்றால் நீதிமன்றத்தில் தான் வாங்கினேன். விவாகரத்து சம்பந்தமான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2016 ல் அப்துல்லாவை திருமணம் முடித்து 2019 ஆம் ஆண்டி ஜமாத் மூலமாக விவாகரத்து பெற்றேனா என்றால் சரிதான், பிறகு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து விவாகரத்து பெற்றேன். அப்துல்லாவிடம் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

2) எந்த தேதியில் எதிர்மனுதாரருடன் நிக்கா நடைபெற்றது என்றால் 16.06.2022 ஆம் தேதி. நிக்காவின் சான்று படி மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இரண்டாவது திருமணம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு திண்டுக்கல்லில் நாங்கள் இருவரும் தனிக்குடித்தனம் நடத்தி வந்தோம் என்றால் பாரப்பட்டியில் இருந்தோம். எத்தனை மாதங்கள் வாழ்ந்தேன் என்றால் சுமார் 5 மாதத்தில் வாழ்ந்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் அசிஸ் அகமதை எதிர்மனுதாரர் அடித்ததாக கூறியுள்ள நிலையில் அது சம்பந்தமாக புகார் ஏதும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. அதே போல் நிரூபண வாக்குமூலத்தில் பாரப்பட்டியில் வசித்தபோது எதிர்மனுதாரர் அடித்து

சித்ரவதை செய்வதாக கூறியுள்ள நிலையில் அது சம்பந்தமாக ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, ஜமாத்தில் சொன்னேன். ஜமாத்தின் விசாரணை செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது அம்மா, அப்பா எனது திருமணத்திற்கு சீர்வரிசை மற்றும் சுமார் 50 பவுன் நகை கொடுத்ததாக சொல்லியுள்ளதை பற்றி நிக்கா சான்றிதழில் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி சீர்வரிசை மற்றும் 50 பவுன் நகை பண்ட பாத்திரங்கள் எதிர்மனுதாரர் என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

3) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., M.Ed., படித்துள்ளேன். ஒட்டன்சத்திரம் யூனியன் ஆபிஸ்க்கு எதிரே உள்ள வீடு எனது அப்பாவுக்கு சொந்தமானதா என்றால் எனது தாத்தாவிற்கு சொந்தமானது. எதிர்மனுதாரர் பெல்லா கம்பெனியில் தலைமை பொறியாளராக பணியாற்றுவதாகவும், மாதம் ரூ.45,000/- சம்பளம் பெறுவதாகவும் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது சம்பந்தமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.4 ன் படி முதல் கணவரிடமிருந்து மிக பெறும் தொகையை பெற்றுக் கொண்டு விவாகரத்து செய்து கொண்டேன் என்றால் இல்லை. நான் எதுவும் வாங்கவில்லை. நான் கடந்த 2022 டிசம்பர் முதல் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். கடந்த 15.04.2023 ஆம் தேதி எதிர்மனுதாரருடன் ஏற்பட்ட சண்டையில் நான் கோபித்துக் கொண்டேன் எனது அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றால் இல்லை, நான் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் எனது அம்மா வீட்டில் தான் இருந்து வருகிறேன்.

4) நான் எந்த பள்ளியில் பணியாற்றினேன் என்றால் திண்டுக்கல்லில் உள்ள கிரின்பார்க் என்ற தனியார் பள்ளியில் 10.10.2022 முதல் 31.12.2022 ஆம் தேதி வரை பணியாற்றினேன். நான் தனியார் பள்ளிக்கு வேலைக்கு சென்றதால் தான் எதிர்மனுதாரருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் இல்லை. நான் ஒட்டன்சத்திரத்தில் தனியார் பைனான்ஸ்ல் வேலை பார்த்து வருகிறேன் என்றால் இல்லை. எனது அசல் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தியததாக கூறுவதற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் நான் தான் எதிர்மனுதாரரால் பாதிக்கப்பட்டுள்ளேன். எனக்கு சொந்தமாக வீடு, தோட்டம் மற்றும் பைனான்ஸ் உள்ளது என்றால் இல்லை, வீடு, தோட்டம் அனைத்தும் எனது தாத்தா பெயரில் உள்ளது. நான் ஆசிரியராக பணியாற்றி வருவதால் எனக்கு போதிய வருமானம் உள்ளது என்றால் இல்லை, வீட்டில் தான் உள்ளேன்.

5) நான் சட்டப்படி முதல் கணவரிடம் மணமுறிவு பெறவில்லை என்றால் நான் ஜமாத்திலும், கோர்டிலும் பெற்றுள்ளேன். அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஏதேனும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மடத்துக்குளத்தை சேர்ந்த அப்துல்லாவிடம் தான் ஜீவனாம்சம் பெற வேண்டும் என்றும் எதிர்மனுதாரரிடம் பெற எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எனது மகனை பார்த்துக் கொள்ள முதல் கணவரிடம் தான் ஜீவனாம்சம் பெறவேண்டும் என்றும் எதிர்மனுதாரரிடம் பெற முடியாது என்றால் நான் எனது மகனுக்காக கேட்கவில்லை, எனக்காக கேட்கிறேன். என்னிடம் போதிய வருமானம் உள்ளது என்றால் இல்லை. எதிர்மனுதாரர் கூலி வேலைக்குதான் செல்கிறார் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2026.01.30 17:36:59 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 30/01/2026